பஃத்தறிவு இயக்கத்தின்

பழமை

"ஜீவபந்து" T.S. ஸ்ரீபால்

பகுத்தறிவு
இயக்கத்தின் பழமை

ஆசிரியர் :

ஜீவபந்து T. S. ஸ்ரீபால்

வெளியீடு

தமிழ்ச் சமணர்கள் சங்கம்
மதுரை.

பொருள் உதவி: திரு சொ. அனந்தராசு அவர்கள்
எறும்பூர்.

இலவச வெளியீடு

நான்காம் பதிப்பு:

1993

இலவசம்

தமிழ்ச் சமணர்கள் சங்கம், மதுரை.
துவக்க விழா 25-7-93 அன்று வெளியிடப் பெற்றது

கிடைக்குமிடம்:

சொ. அனந்தராசு,
எறும்பூர் அஞ்சல் 604404.
(தி.ச.மாவட்டம்)

பகவதி ஜெயின்
12, ஜெகன்னாதன் வீதி
மீனாக்ஷி நகர் 4வது தெரு
வில்லாபுரம்
மதுரை-625 012.

குறிப்பு:-இந்த நூல் வேண்டுவோர் ஒரு ரூபாய் தபால் தலை அனுப்பவும்.

I

உயிர்க் கொலையைத் தடுத்த ஜீவபந்து ஸ்ரீபால் !

நான் வாழ்ந்த — படித்து வளர்ந்த திருவாரூரில் என்னுடைய இளமைக்காலத்தில் அங்குள்ள காளியம்மன், பிடாரியம்மன் கோயில்களில் ஆடுகளை — மாடுகளை வெட்டுகின்ற திருவிழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுவதுண்டு.

அதில் பிடாரி கோயில் திருவிழாவிலே மாடுகளையும் வெட்டுவார்கள், இந்த ஆண்டு வெட்டப்பட்ட மாடுகளின் ரத்தத்தை ஒரு பானையிலே அப்படியே பிடித்து வைத்து அதை மூடி கோயில் பிரகாரத்திலேயே புதைத்து வைத்துவிட்டு, அடுத்த ஆண்டு அந்த ரத்தத்தை எடுத்து சோறு பொங்கிச் சமைத்து அந்த ரத்தத்தோடு பிசைந்து அதை காளிக்கு — பிடாரிக்குப் பூஜை செய்வது வழக்கம், இது திருவாரூரிலே பல ஆண்டுகாலமாக நடைபெற்றது.

அப்படி ஒரு கடாமாட்டினை கடவுளின் பெயரால் — மதத்தின் பெயரால் — தெய்வீகத்தின் பெயரால் — மூட நம்பிக்கையின் பெயரால் — ஒரு உயிர்ப்பலி செய்வதைத் தடுத்திட அன்றைக்கு முன் வந்து நாடெல்லாம் பிரச்சாரம் செய்தவர்களிலே ஒருவர் திரு. ஸ்ரீபால் எஸ். பராவார் !

மிகவும் வயதேறிக் காணப்படுகின்ற தோற்றத்தோடு நான் சில ஆண்டுகட்கு முன்பு அவரைச் சந்தித்து இருக்கின்றேன்.

II

பல நேரங்களில் அவருடைய பேச்சை நான் கேட்டிருக்கிறேன், பத்து பேர், இருபது பேரை வைத்துக் கொண்டுகூட அவர் சலிக்காமல் பேசி அன்பு தழைத்திடவும் ஆண்டவன் பெயரால் நடைபெறுகின்ற இந்த பலிகள் தடுக்கபடவும் அவர் போராடி, அவர் போராடியதின் விளைவாகவும், அப்படிப்பட்ட போராட்டத்தை தந்தை பெரியார் போன்றவர்கள் - பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் ஆதரித்து அந்த அடிப்படையிலே அரசாங்கமே தடைபோட்டு, இப்படிப்பட்ட உயிர்ப்பலிகள் கடவுளின் பெயரால் நடைபெறக் கூடாது, என்று தடுத்த நிகழ்ச்சியும் எனக்கு என்றென்றும் நினைவிருக்கும்.

என வேதான் சமண மதத்தின் பால் மிக இளமை காலத்திலேயே எனக்கு ஒரு நீங்காத பற்று.

டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உரை
— *முரசொலி* 28-8 81

III

FOREWORD

Rao Bahadur. Prof. A. Chakravarthi,
M, A., I. E. S. (Retd.)

This booklet clearly brings out the truth that rationalism in religion is as old as ancient Jainism reveald by lord Rishabha: Jainism emphasises the fact that true religion must be based upon reason and must have nothing to do with various supersituations. Jainism has to the world prescribed 5 great principles of conduct, Ahimsa, Satya, Astheya, Brahmacharya and Aparigraha.

The value of the first two, non-violence and truth, has been fully established by Mahatma Gandhi who used them as a means of gaining freedom for our motherland. Of the three other rules of conduct, the last one is most important, that a man should limit his possessions. A man is expected to impose upon himself that only fraction of his income should be made as his own and a major portion of it should be utilised for common good. This principle is so important in modern world which is characterised by conflict of economic idea-

logies, conflict between Capitalism and Communism, the former claiming the right to own personal property and the latter challenging that right and proclaiming that wealth should be shared commonly by all.

If the Jain principle of moral conduct, that man should not consider all his earnings his own, that he should set apart a major portion of it to the benefit of the society, is strictly followed, then there will be no poverty or misery in the world and no necessity to talk of either Capitalism or Communism. All persons should be happy and contented. No one will be in want and there will be happy harmony in the economic field. When once this harmony is established, political conflict will disappear and peace and prosperity will reign in the world. Mr. T. S. Sripal deserves congratulations for emphasising this point of view in this booklet.

A. Chakravarthi

Madras
21-4-1948

V

இந்நூலாசிரியர் - திரு. ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களுக்குக் கிடைத்துள்ள பாராட்டுரைகள்

—— ✳ ——

டாக்டர் - மு. வரதராசனூர்
பல்கலைக் கழகம் (சென்னை).

"பகுத்தறி வியக்கத்தின் பழமை" (பகுத்தறிவும் சமதர்மமும்) என்னும் தங்கள் நூல் அறிவுச் சுடர்க்குத் தூண்டுகோலாக விளங்குகின்றது. தமிழ்நாட்டின் பெருமையையும், பழைய நாகரிகப் பெற்றியையும் இடையே சுட்டிச் செல்வது பொருந்திய சிறப்பை நல்குகின்றது .... தங்கள் ஊக்கம் சிறந்து வளர்க!

——

"குயில்"

பகுத்தறிவி யக்கத்தின் பழமை யென்னும்
பனுவலினைச் சீவபந்து சீ (ஸ்ரீ) பால்
மிகுத்தநலம் விளைத்துள்ளார் திராவி டர்க்கே
மேனாளில் திராவிடரின் மேன்மை சீர்த்தி
வகுக்கரிய நுண்ணறிவு வாழ்வின் நேர்மை
இவற்றையெலாம் பழநூலின் வாயி லாகத்
தொகுத்தளித்த அறிஞர்க்கு நன்றி! சீபால்
தூயவர்தாம் பல்லாண்டு வாழி நன்றே!

பாரதிதாசன்

——

மூன்றாம்பதிப்பின் முன்னுரை

பகுத்தறிவியக்கத்தின் பழைமை என்னும் இந்நூல் முதன்முதல் 1948 இல் வெளியிடப் பெற்றது பின்னர் சென்னை முத்தமிழ் நிலையத்தின் உரிமையாளர் மேல்மின்னல் திரு. A. சக்கரவர்த்தி நைனார் அவர்கள் 1950 ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டு உதவினார். தற்போது குன்னூர் (Hotel திருக்குறள்) உரிமையாளர் திருமிகுலால்சந்த் ஜெயின் அவர்கள் மூன்றாம் பதிப்பாக அன்பு கூர்ந்து வெளியிட்டுள்ளார்கள்.

இப்பெருந்தகை கோலார் ஸ்ரீமான் பீகம்சந்த்ஜீ அவர்களுக்கும் திருமதி பானிபாய் அம்மையார் அவர்களுக்கும் பிறந்தார்.

இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் தாய்மொழி இந்தி ஆயினும் தமிழ்மொழியிலும் நல்ல பயிற்சியும் அறிவும் பெற்றவர்; தந்தையாரோடு கோலாரில் வியாபாரம் செய்து சிறந்துவிளங்கினார். இவர் திருமதி சந்தோஷ்தேவி என்ற பெண் அணங்கை மணந்து இல்லறம் நடத்திவந்தார் தனியாக வியாபாரம் செய்யவேண்டி 1955 இல் குன்னூரில் லேவாதேவி வியாபாரத்தை ஆரம்பித்தார். பின்னர் திருக்குறளின் பேரில் இவருக்குள்ள பற்றால் குன்னூரில் 'ஹோட்டல் திருக்குறள் என்னும் பெயரால் ஓர் உணவு விடுதி ஆரம்பித்து நடத்திவருகிறார் அத்துடன் நகைவியாபாரமும் செய்துவருகின்றார். இவருக்குள்ள திருக்குறள் பயிற்சியினால் குன்னூரில் நடைபெறும் விழாக்களில் கலந்துகொண்டு திருக்குறள் சம்பந்தமாகச் சொற்பொழிவாற்றியும் வருபவர்.

திருக்குறளிலுள்ள இறை வணக்கத்தையும் அறத்துப் பாலிலுள்ள அறநெறியையும் விளக்கிப்பேசி அவைகள்யாவும் ஜைனநெறிகளே என்று அறுதியிட்டு நிலைநிறுத்திப் பேசிப் பலராலும் பாராட்டப்பெற்று விளங்கி வருகிறார். இப் பெருந்தகை பகுத்தறிவின்பால் பற்றுடையவராகையால்

திருக்குறள் அறிவியக்கக் கொள்கைகள் என்பதை அறிந்து இந்த நூலை அச்சிட்டு வெளியிட விழைந்தார். அவரது விருப்பத்தை ஏற்று யானும் அனுமதியளித்தேன்.

இப்பெரியார், ஜைன சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகிய அஹிம்சை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய இரு பேரறங்களைத் தம் வாழ்க்கையின் பண்புகளாகக் கொண்டும் வாழ்பவர். எனவே இவர் குன்னூரிலும் நீலகிரியிலு நடைபெறும் தமிழ் விழாக்களுக்கும் தமிழ் வளர்ச்சி நிலையங்களுக்கும் நன்கொடைகள் வழங்கி ஆதரிப்பவர். இவர் சமயப் பற்றும் கொண்டவர் சமய சம்பந்தமான எல்லா விழாக்களுக்கும் தாராளமான கொடை வழங்குபவர். குன்னூரில் தமக்குரிய ஒரு கட்டிடத்தை அருகர் ஆலயம் அமைக்க அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இத்தகு சிறந்த வள்ளலாக விளங்கும் இப் பெரியார் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டமைக்காக என நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூல் முதற் பதிப்பாக வெளிவந்த போது பாராட்டுரை எழுதிய மறைந்த தத்துவமேதை பேராசிரியர் அ சக்கரவர்த்தி நைனார் M A. (I.E S) அவர்கட்கும் புதுவை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கட்கும், தமிழக பெர்னாட்ஷா எனப் புகழ் பெற்றவராகிய அறிஞர் மு. வரதராசனார் அவர்கட்கும் ஏனை யோருக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலைச் சிறப்பாகச் அச்சிட்டு உதவிய சிந்தாமணி அச்சக உரிமையாளர் திருமிகு. தி. ச. வாசுதேவன் அவர்கட்கும் என் நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக.

வாழிய நல்லறம!

சென்னை-1
10-1-1976

இங்ஙனம்
T. S. ஸ்ரீபால்

VIII

மூன்றாம் பதிப்பின் பதிப்புரை

தமிழ் நாட்டிற்கு இச் சிறிய நூலினை மகாவீர ஜைன சங்கத்தின் Veer Sang) வெளியீடாக அறிமுகப் படுத்துகின்றோம். திராவிட நாகரிகத்தின் பழமையையும் மேன்மையையும் விளக்கும் இவ்ஆராய்ச்சிக் கட்டுரை திரு ஜீவபந்து, T. S ஸ்ரீபால் அவர்களால் எழுதப் பட்டு, அருட்பெருஞ்ஜோதி, போர்வாள் மும்மணி முதலிய பததிரிகைகளில் வெளிக வந்தது. இக்கட்டுரையைத் தமிழ்நாட்டு ஜைன சமயத் தலைவரும் அறிஞருமாகிய உயர்திரு. ராவ்பகதூர் A சக்கிர வர்த்தி நயினார் M.A. I.E.S. (Rtd) அவர்கள் நன்கு பாராட்டி மகிழ்ந்தார்கள் மேலும் இக்கட்டுரையைப் பத்திரிகை களில் வாசித்த பல அறிஞர்கள் இதனை நூல்வடிவாக அச்சிட்டு வெளியிடின் ஜைன (சமண) சமயத்தின் வரலாற்றுண் மைகளையும் சிறப்பாகத் திராவிடர் பண் பாட்டினையும் பலரும் அறிந்து கொள்வ தற்கு உதவியா யிருக்குமெனப் பணித் தார்கள் எனவே எங்கள் சங்கம் மகாவீர

IX

ஜெயந்தியின் நினைவாக இந்நூலினை வெளியிட மகிழ்ச்சியுடன் முன்வந்தது. எங்கள் உள்ளக்கருத்தை அன்பர் ஸ்ரீபால் அவர்களும் வரவேற்றுப் பல புதிய கருத்துக்களையும் அத்துடன் சேர்த்து எழுதித் தந்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியறிதல் உரித்தாகுக,

சமண சமயப்பெரியோர்கள் உலகங் கலைக்கும் மக்கள் பண்பாட்டிற்கும் செய்திருக்கும் அரும்பெருங்கலைச் செல்வங்களைப் பற்றிப் பல அறிஞர்களும் சிறப்பாகத் தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்களும் வரலாற்று ஆசிரியர்களும் நன்கு அறிவார்கள். எனவே மறைக்கப்பட்ட இத்தகைய புதைச் செய்திகளையுங் கலைகளையும் தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரும் நன்கு ஆராய்ந்து பல நூல்களை எழுதி உதவுவார்களாயின் அவைகளை எங்கள் சங்கம் மகிழ்வுடன் ஏற்று அச்சிட்டு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறதென்பதை வணக்கத்துடன் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

மகாவீர ஜைன சங்கத்தார்.

X

பணிந்துரை

சொ. அனந்தராசு ஸ்ரீரம்பூர்

பகுத்தறிவு என்பது எப்பொருளிலும் ஆய்ந்து அதனைதன் இயல்பினை உள்ளவாறே தெளிதலாம். இது வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு நிலைப் பாடாகும் அறிவுடைமையின் பாற்படும், இவ்வுயரிய பண்பு, நீண்ட காலத்துக்கு முன்னரே இப்பெரும் நாடெங்கும் நிலை கொண்டிருந்த திராவிட மக்களின் "இயல்பு" ஆகவே இருந்தது என்றால் அது மிகை-யாகாது. பின்னர் பையப் பைய இங்கு வந்து பரவிய ஆரிய இனத்தாரின் திறனுர்ந்த தன்னலச் சூழ்ச்சி-களின் பல்வகைக் கவர்ச்சிகளால் காலப்போக்கில் திராவிட இனம் அவ்வியல்பிலிருந்து சரிக்கப்பட்டு விட்டது. புனைவு, மயக்கு, புரிந்துகொளும் திறனின்-மை, சிருட்டிவாதஏற்பு, மாந்தரினத்தேஏற்றத்தாழ்வு தெய்வீக ஏற்றப்புரட்டு, சாதி, வருணம் ஆச்சிரமம், சடங்கு கொலை வேள்வி,மூட நம்பிக்கை ஆகியஇழிவுக் குவியல்களின் அடியில் திராவிடம் நினைவழிந்தது இந்நிலையில் எழுந்தது வள்ளுவம். எப்பொருள் எத் தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு! எப்பொருள் யார் யார் வாய்க் கேட் பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

என இடித்துரைத்தது. அறிவுடையார் எல்லாம் உடையார்! எனப் பகுத்தறிவை முன்னிறுத்தி முரசு கொட்டியது! அறம்-பொருள் இன்பம் வீடு என்ருரை நோக்கிச் சிரித்தது! முதல் மூன்றின் உள்ளேயே வீட்டைவிரித்தது! இது எல்லாம் முந்தைத்திராவிடத்தின் வாழ்வியல் அல்லவா? ஆனால்பகுத்தறிவியக்க எழுச்சிகளை எல்லாம் "ஏமாற்று" எளிதாக வாயிற் போட்டுக்கொண்டே வந்தது! இந்நிலையில் நூற்-ருண்டுஇருபதை நோக்கியது! பகலவன் உதித்தான்! உப்புக்கடலில் அல்ல! உணர்ச்சிக் கடலாம்ஈரோட்டில்! இருள் இடிந்தது! அண்ணு வந்தார் இருள் புண்ணுயிற்று! அருமைத் தலைவர் கலைஞர் எழுந்தார்! இருள் மிரள மிரள விழித்து ஓடப் பார்க்கின்றது! சும்மாவிட்டு விடுவாரா கலைஞர்!

இந்நூல் இன்றுவரை தொடர்ந்து வரும் இந்தப் பகுத்தறிவு இயக்கத்தின் தொன்மையை அதன் இனத்தை! இனமாட்சியை, நடுநின்று ஆய்ந்து மிகத் தெளிவாக நமக்கு விளக்குகினறது நாமும் உணர்கின்ரேம்! சமணம் மதமல்ல! அதுமுன்னைத்திராவிடப் பகுத்தறிவு இயக்கம்!

மேலும் நமது கவனம் சர். R.K. சண்முகம் செட்டியார் அவர்கள் கூறியதில் படிகின்றது. —ஆரியம் வருமுன்னர் இங்கு வசித்துவந்த திராவிட மக்களின் சமயம் சமணமாகவே இருந்ததால் அதைத் திராவிட நாகரிகம் எனக் கூறுவதே சரி எனக்

கருதுகின்றேன் - - - - என்ருர் அவர்.

இந்நூலாசிரியராகிய ஜீவபந்துப் பெருமகனாரின் அருமையும் பெருமையும் இதில் உள்ள இதன் முந்திய பதிப்பு முகவுரைகளே நன்கு புலப்படுத்தும் அவர்கட்கெல்லாம் எனது நன்றி. திராவிட இனமான உணர்ச்சி எங்கும் எழுந்துவரும் இந்நாளிலே இந்நூல் அதனை மேலும் வலுவாக்கிடல் கூடும் என்பதால் இதனை இலவசமாகவே வெளியிடத் துணிந்தேன்.

எனது வேண்டுகோளை அன்புடன் ஏற்று இதனைத் திருவமைந்த பதிப்பாக வெளிக்கொணர்ந்த எனது அருமைச் சகோதரர் மதுரைப் பாவலர் பகவதி ஜெயின் அவர்கட்கு என்றும் நன்றியுடையேன் வாழ்க அவர்தம் தொண்டுள்ளம்!

இந்நூலை சிறந்த முறையில் விரைந்து அச்சிட்டுத் தந்த திருநகர் பாலர் இல்லம் அச்சகத்தாருக்கும், பெரிதும் ஆலோசனை தந்து உதவிய ஐயா மேலாளர் திரு பி. இராமசாமி அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

மதுரை.
25.7.93

அன்புடன்
சொ. அனந்தராசு
எறும்பூர்.

XIII

பதித்தோன் பாட்டு

மிச்சம் அறிந்தே அச்சிற் பதிக்கும்
வணிக நோக்கே வழக்கமாகக்
கொண்டுளார் தாமே
மண்டிய உலகிதில்
தொன்மைத் திராவிடத் தன்மையும், உயர்வும்,
கடவுண் மறுப்பும் கருணைச் சிறப்பும்
நீதி, நேர்மை நிறை, பொறை யாதிய
நல்லன யாவையும் நானில முணரவும்
ஆரியப் புரட்டின் அடிவே றறுக்கவும்
பகுத்தறிவியக்கப் பழமை என்ற
இந்நூல் பெரிதும் ஏற்புடைத் தென்றே
அருமையின் நோக்கி ஆயிரம் படிகள்
இலவச மாக ஈந்துள இவர், நம்
தாவிற் பெரும்புகழ் ஜீவ பந்துப்
பெருமக ளுருடன் ஒருமக ளுக
ஆண்டுகள் பலவும் அருமையி னுறையப்
பெற்ற பேறினர்! மற்றிங் கவரது
கருத்தும் உணர்ந்தவர்! திருத்தகு நல்லர்!
பணப்பற் றில்லவர்! இனப்பற் றுள்ளவர்!
ஜீவ பந்துச் செவ்வியர் பேரில்
ஆவிவைத் திருக்கும் அன்பினர்! பண்பினர்!
அனந்த ராசு எனும் கனிந்த சொல்லினர்
இந்நூல் போலப் பொன்னூல் பலவும்
அச்சி லேற்றி அன்பளிப் பாக்கிட
மூந்துறு சிந்தையர்! தொண்டிற்
பிந்துறார்! இங்கிவர் பெரிது வாழியவே!

மதுரை.
25,7.93

பகவதி ஜெயின்

பகுத்தறிவியக்கத்தின் பழைமை

இன்று எந்நாட்டிலும் பகுத்தறிவியக்கம் பரவுகிறது. அறிவுக்குச் சுதந்திரம் வேண்டுமெனப் பல அறிவாளிகள் மதவாதிகளுடன் போராடுகின்றனர் எத்தகைய பேரறிஞராயினும் அவர் கூறுவனவற்றை அப்படியே ஒப்புக்கொள்வதென்பதைத் தற்கால அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை கண்கள் எவ்வாறு புறப்பொருள்களைத் தெளிவாக அறிகின்றனவோ. அவ்வாறே நூற்பொருள்களின் உண்மைகளை நன்கு ஆராய்ந்து அறியவேண்டும் என்ற உணர்ச்சி மக்களிடை இது போது பெரிதும் பரவி வருகின்றது இவ்வுணர்ச்சி பெரும்பாலும் புரட்சி மனப்பான்மை கொண்டவர்களிடையே தான் வளர்கின்றது மதவாதிகளாயினும் சரி, அரசியல் வாதிகளாயினும் சரி, பகுத்தறிவாளர் கொள்கைகளுக்குச் செவிசாய்க்கும நிலைமை ஏற்பட்டிருக்கின்றது இவ்வியக்கம், (Rationalism) மேல்நாடுகளில வேரூன்றிவிட்டது. கீழ்நாடுகளிலும் நன்கு வளர்ச்சிபெற்று வருகின்றது. எனவே இத்தகைய பகுத்தறிவியக்கம் தோன்றின பழைமையையும், அது தோன்றிய நாட்டையும், தோற்றுவித்த அறிஞனையும் பற்றிச் சிறிது ஆராய வேண்டுவது இன்றியமையாததாகும்.

ஆதிபகவன் யார் ?

நமது தமிழ் மறையாகிய திருக்குறள் கடவுள் வாழ்த்தின் முதற் குறள் ஆதிபகவானைப் பற்றிக் கூறுகின்றது. மற்ற ஒன்பது குறள்களிலும அவ் ஆதிபகவானின் நற்பண்புகள் வருணிக்கப்பட்டுள்ளன. ஆதிபகவான் என்பதனாலேயே அவருக்குப் பின்னர் பலர் அவ்வாறே விளங்கினர் என்பது பெறப்படுகின்றது. ஆகவே, அவர் முதல்வராகின்றார். ஜைன (சமணம்) சமய நூல்களில் ஆதிபகவானைப் பற்றிய அரிய வரலாறுகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆதிபகவான் எனப் பேசப்படுபவர் நம்மைப்போன்று தாய் தந்தையர் வயிற்றில்

பிறந்தவரே. மனைவி மக்களுடன் வாழ்ந்தவர். அரசர் குலத் தலைவர். V அகரமுதல எழுத்துக்களையும், ஒன்று முதலாய எண்களையும் தோற்றுவித்த முதல் ஆசிரியர். வாள், வரைவு, உழவு, வாணிபம், கல்வி, சிற்பம் ஆகிய அறு தொழில்களையும் கற்பித்த சமுதாய அமைப்பாளர். இல்லறம் துறவறம் ஆகிய இரண்டு அறங்களையும் வகுத்த அறவாழி அந்தணர். அஹிம்ஸா தருமத்தின் தந்தை. தேவைக்கு மேலான பொருளைப் பதுக்கி வைத்தல் ஐம்பெரும் பாவங்களில் ஒன்றென அறம் வகுத்த பொதுவுடைமை வாதி. துறவறம் பூண்டு ஐம்பொறிகளையும் வென்றவர். வினையின் நீங்கி விளங்கிய அறிவர். மாசி கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியன்று கைலாசத்தில் நிர்வாண மெய்தியவர். அதாவது பேரா இயற்கை அல்லது பிறவா யாக்கைப் பெரியோரானவர். சித்தன், சிவன், சிவகதி நாயகன் எனப் போற்றப்பட்டவர். அவர் நிர்வாண மெய்தி நாள்தான் இன்றும் சிவராத்திரியெனப் புனிதமாகக் கொண்டாடப்படுகிறது.

இவர் தமிழ் நூற்களால் ஆதிபகவன், ஆதிநாதர், ஆதிதேவர், ஆதிமூர்த்தி எனப் புகழப்படுகின்றார். அவர்தம் இயற்பெயர் விருஷபதேவர் என்பது.

வைதிக நூற்களில் விருஷப தேவர்

விருஷபதேவர் சமண நூல்கள் பலவற்றிலும், $ வைதிக சம்பந்தமான யஜுர் வேதத்திலும் பாகவதம், வராக புராணம், அக்கினி புராணம் முதலிய நூல்களிலும், சிறப்பான இடம் பெற்றுள்ளார். விருஷப தேவர் கொள்கை தங்கள் சமயக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பாடாக இருந்தும்,

---

V "விருப்புறுபொன்னெயிற்குள் விளங்க வெண்ணெழுத்
திரண்டும் பரப்பிய ஆதிமூர்த்தி"

— சூடாமணி நிகண்டு

$ (Indian Philosophy Vol.I.P, 287)

அவர்தம் இயக்கம் அறிவிற்கும் மக்கள் பண்பிற்கும் இன்றி-யமையாதனவாய் அமைந்துள்ளமையால் அவரையும் தங்கள் கடவுளின் அவதாரங்களில ஒருவராக ஆரியர்கள் மேலே கூறிய பாகவதம் முதலியதங் கள் வைதிக நூல்களில் போற்றியுள்ளார்கள்

பகுத்தறிவியக்கத்திற்கு அடிகோலியவர்

விருஷப தேவர் பேரறிஞர். தாம் கண்ட மெய்ப்பொருள் விளக்கத்தைப் பலருக்கும் போதித்து வந்தார். அவர் தம் சொற்பொழிவின் முடிவில் "எனது அறவுரைகளை அமைதி-யாகவும் ஆவலாகவும் கேட்டு வந்தீர்கள். நீங்கள் என்னை ஒரு தெய்வீகப் புருஷனுகப் போற்றுகின்ற காரணத்தால் நான் கூறிய அறிவுரைகளனைத்தையும் அப்படியே ஏற்றுக்-கொள்ள வேண்டுமென நினையாதீர்கள். நிறுத்து, அறுத்து சுட்டு, உரைத்துப பொன் கொள்வார் போல எனது உரை களையும் உங்கள் பகுத்தறிவால் நன்கு ஆராய்ந்து உண்மைப் பொருளைத் தெளிபுங்கள் அதன் பின்னர் அவ்வறநெறியில் நின்று உய்யுங்கள்" என்று மொழிவார் இந் நிலைகளை முறையே நற்காட்சி நன்ஞானம். நல்லொழுக்கம் என்று அழைக்கப்படும் என மக்களது அறிவிற்குப் பூரண சுதந்தர. மளித்தும் பேசுவார் இவ்வுண்மையை "மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பர், எப்பொருளுங் கண்டு உணர்ந்தார்." என அருங்கலச் செப்பு ஆசிரியரும்,

"மெய்ப்பொரு டெரிதல் மற்றப் பொருண்மிசை விரிந்தஞான
மப்பொருள் வழாத நூலினருந்தகை யொழுக்கந் தாங்கி
யிப்பொரு ளிவைகள் கண்டா யிறைவனுல் விரிக்கப் பட்ட
கைப்பொருளாகக் கொண்டு கடைப்பிடி கனபொற்குரோய்'

எனச் சூளாமணி ஆசிரியரான தோலாமொழித் தேவரும் கூறி யவற்ருல் தெளியலாப்.

வரப்பிலா அறிவினுல் விளங்கிக் குற்றமற்ற அறங் களையே போதித்த விருஷபதேவர், தம் உரைகளையும் நன்கு

ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும்படி கூறிப்பருளிய அவர்தம் இணையற்ற சான்றாண்மையைக் கண்ட பேரறிவாளர்கள்,

'தீதில்லா நயமுதலாத் திருந்தியநல் லளவைகளாற்
கோதில்லா வரும்பொருளைக் குறைவின்றி யறைந்ததற்பின்
பேதில்லா வியற்காட்சி யருளியதுன் பெருமையோ"
எனப் போற்றித் துதித்திருக்கின்றனர்.

எனவே, எத்தகைய பேரறிஞராயினும் சரி அவர் கூறு வனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நமது அறிவால் நன்கு ஆராய்ந்தே அப்பொருளின் உண்மையைக் கோடல் வேண்டுமென்ற பகுத்தறிவியக்கத்திற்கு அடிகோலியவர் விருஷப தேவரேயாவர்

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு! .... என்றும்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு! .... என்றும்

திருக்குறளில் தேவரும் மொழிந்தமை காண்க.

நற்காட்சியாளரே பகுத்தறிவாளர்

பகுத்தறிவின் வழி நின்ற அறிவியக்கக் கொள்கையுடை யாரைப் பொய்தீர் காட்சியோர், துகள்தீர் காட்சியோர், மையறு காட்சியோர், மாசறு காட்சியோர் என அழைப்பது பண்டைக் கால மரபாகும் மேலே கூறிய காட்சிகளுக்கு நற்காட்சி என்றே அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார். இக் காலத்தில் அத்தகையாளரைப் பகுத்தறிவாளர் (Rationalist) என்றழைக்கின்றனர். இந்நற்காட்சியின் நறுமணம் நம் பண்டைத் தமிழ்க் காவியங்களிலும் நீதி நூல்களிலும் மணம் வீசுவதைக் காணலாம்.

*யாப்பருங்கல விருத்தி 83ம் சூத்திரத்தின் உரை மேற்கோள்

திருக்குறளில்

"இலம் என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்"

"பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்"

"செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊன்"

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

"கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்"

என்றும். சிலப்பதிகாரத்தில் மாதவி தன் காதலனாகிய கோவலனுக்கு எழுதிய ஓலையில்

"கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"

என்றும் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் மாடலன் செங்குட்டுவனைச் சந்தித்துப் பல அறவுரைகள் பகர்கின்றான். முடிவில் இவைகள் யாவும்,

"பொய்யில் காட்சியோர், பொருளுரை யாதலின்"

எனக் கூறி முடிக்கின்றான். தமிழ்க் காவியங்களுள் தலைசிறந்து விளங்கும் சீவக சிந்தாமணியின் ஆசிரியர் அதன் உரைச் சிறப்புப் பாயிரத்தில்.

"பொய்யா மொழிபுகல் ஐயறு காட்சித்
திருத்தகு முனிவன்"

எனப் புகழப் பட்டுள்ளார்.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் அதன் பாயிரத்தில்,

"துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
யளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே"

என அழைக்கப் பட்டுள்ளார்.

பெருங் கதையில் நற்காட்சியைப் பற்றிய ஒரு நிகழ்ச்சி நம்மை மகிழ்ச்சியி லாழ்த்துகின்றது. அறுவகைச் சமயப் புலவர்களும தம்முள் எதிர்த்து வாதம் செய்தலைக் காணப் பிரச்சோதன மன்னன விரும்புகின்ருன். அவ்வாறே அரசர் அவையில் அறுசமய அறிஞர்களும் கூடி வாதிக்கின்றனர். அவர்களில் சமண முனிவர் நற்காட்சியை முன்னிறுத்தி வாதிடுகின்ருர்; வெற்றியடைகின்ருர் இதனைக் கொங்கு வேளிர்,

"கற்ருேர் மொய்த்த முற்றவை நடுவண்
தாழாப் பெரும்புகழ்க் காளக் கடவுண்முன்
பாலக னென்னும் பண்ணவர் படிவத்துக்
காள சமணன் காட்சி திறுப்ப
ஐம்பெருஞ் சமயமும் அறந்தோற்றன..."

என விளக்குகின்ருர்.

தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாளைத் திருக்குறளிலே காண்கின்ருேம் ஓமகுண்டம், சோமகுண்டம் மூழ்கிக் காமன் கோட்டத்துக் கடவுளை வழிபட மறுத்துக் கொழுநனையே தெய்வமாகக் கொண்டாடும் கற்புக் கடம் பூண்ட கண்ணகியின் மாண்பினை, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பல பகுதிகளில் வியந்து புகழ்கின்ருர் இங்கேயும் நமது கொங்குவேளிர் பெண்ணின் பெருமையைப் பேசும்போது பெண்களுக்கு அறிவு அதிலும் பகுத்தறிவு எவ்வளவு இன்றியமையாத் துணையாக விளங்குகின்றது என்பதை,

"எழுந்த ... ...
கையறு வீழினுங் கணவ னல்லது
தெய்வ மறியாத் தேர்ந்துணர் காட்சிப்
படிவக் கற்பிற் பலகோ மகளிருட்..."

எனப் பாராட்டுகின்ருர். வளையாபதியில்,

"துக்கந் துடைக்கும் துகளறு காட்சிய
நிக்கந்த வேடத்து இருடியர் கணங்களை"

என நற்காட்சியையுடைய துறவியர் புகழப் பட்டுள்ளனர்.

"கள்ளார்கள் ளுண்ணூர் கடிவ கடிதொரீயி
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயின்பொய் கூறுர் வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர்."

என நாலடியாரிலும்,

"உயிரும் உயிரல்லதும் புண்ணியம் பாவம் ஊற்றுஞ்
செயிர்தீர் செறிப்பும் உதிர்ப்புங் கட்டு வீடும் உற்ற
துயர் நீக்கும் தூயநெறியுஞ் சுருக்கா யுரைப்பன்
மயல் தீர்ந்த காட்சி யுடையோயிது கேண்மதித்தே!

என மேருமந்தர புராணத்திலும் காண்கின்றோம்

பகவான் மகாவீர வர்த்தமான சுவாமிகள். விருஷப தேவரால் அருளப்பட்ட நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய அறிவியக்கக் கொள்கைகளை மக்களிடம உபதேசித்து வருகையில், ஒரு சமயம் இராஜகிரக நகரம் விஜயம் செய்தார். சுவாமிகளின் வரவினை அறிந்த அந்த நாட்டு மன்னன் சிரேணிக மகாராஜன் பெருமகிழ்ச்சி கொண்டு அச்செய்தியை நகரத்தார் அறியும் வண்ணம் ஆனந்த பேரிகை மூலம் அறிவித்தான். இச்செய்தியைக் கேட்டு அறிவியக்கக்கொள்கையுடையாரெல்லாரும் அத்தூயோனின் அறவுரை கேட்க விரைந்து வந்தனர். இவ்வரலாற்றுச் செய்தியை ஜீவ சம்போதனை ஆசிரியர்,

'ஆனந்த மெய்தி யரசன் அணிநகரத்து
ஆனந்த பேரியறைவித்தான்—ஆனந்தச்
சொல்லாரக் கேட்டுத் துகள்தீர்ந்த காட்சியார்
எல்லாரும் வந்தடைந்தா ரீண்டு"

எனக்கூறி நம்மை மகிழ்ச்சியிலாழ்த்துகின்றார்

இவ்வாறே பகுத்தறிவியக்கத்தாரின தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் நற்காட்சியும், நற்காட்சியுடையாரும் நன்கு பாராட்டப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்று; அதற்கு முரணான கொள்கைகள் பல நமது தமிழகத்தில வந்து புகுந்தன.

அவைகளை நமது பகுத்தறிவுக் கலைகள் ஏற்க மறுத்தும் கண்டித்தும் இருப்பதைப் புலவர் பெருமக்கள் காணலாம்.

கடவுளும் உலகமும்

இவ்வளவு சிறப்புற்ற பகுத்தறிவை அடிப்படையாக வைத்து அறம் வகுத்த விருஷபதேவர், ஆக்கல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலகளில் ஈடுபடுவதும், அவதாரங்கள் பல எடுப்பதும், அடியார்களுக்குப் பரிந்து வருவதும், சோதிக்க வருவதுமாகிய திருவிளையாடல்களைப் புரியும் கடவுளைப்பற்றி யாண்டும் பேசவில்லை. அறிவுக்குப் பொருத்தமில்லாத எந்தக் கொள்கைகளையும் அவர் எங்கும் உபதேசிக்கவில்லை ஏனெனில், உலகம் கடவுளால் படைக்கப்பட்டதாயின், அது இன்பமயமாயிருக்கவேண்டும். ஆனால் உலகம் துன்பமயமாய் இருக்கக் காண்கிறோம்! மேலும் கடவுளுடைய அவதாரங்களாகவும், தூதர்களாகவும் அடியார்களாகவும் வந்தவர்களெனக் கூறும் பெரியோர்களும் இந்த உலகத் துன்பத்தினின்றும் தப்பி வாழ முடியவில்லை! எனவே இந்த உலகம் என்றும் இயற்கையாயுளதென்பதும் மக்களின் இன்ப துன்பங்களுக்குக் காரணம் கடவுளே அல்ல என்பதும் இத்தகைய உலகைச் செம்மைப் படுத்தும் ஆற்றல், நாட்டில் தோன்றும் அறிஞர்களுக்கே உரியது என்பதும், அவருடைய பூரண நம்பிக்கை. இவ்வுண்மையைத் தற்கால விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

*இந்த உலகம் என்றும் படைக்கப்பட்டதன்று; அது முடிவுறுவதும் இல்லை. ஆனால் நிரந்தர வளர்ச்சி நிலையில் உள்ளது'' என ப்ரெட் ஹாயில் (Fred Hoyle) என்ற விஞ்ஞான நிபுணரும்,

---

*The universe was never created and will never end but in permanent state of creation (Fred Hoyle).

*உலகை ஆள்வது எது? யார்? அதை நாம் உற்று நோக்கும் அளவில், உலகம் தன்னைத்தானே ஆளுகிறது அவ்வாட்சியுடன் ஒருநாடு அல்லது ஆட்சிமுறையை ஒப்பனை செய்வது பொய்மையுடையது'' என மற்றொரு தலைசிறந்த விஞ்ஞான நிபுணரான ஜூலியன் ஹக்ஸ்லி (Ju ian Huxley) என்பவரும் கூறியுள்ளார்கள்.

ஆகவே, விருஷபதேவர் மக்கள் பண்பிற்கும், வாழ்விற்கும், உயர்விற்கும் வேண்டிய அறங்களையும் சமுதாய அமைப்புக்குரிய வழிகளையுமே வற்புறுத்திச் சென்றார். நிறைந்த அறிவு நிலைபெற்று இருவினைகளினின்றும் நீங்கிய உயிரே கடவுள் என நவின்றார்

'தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும'

இரு வினைகளின் நீக்கத்திற்கும் மேலே கூறிய நற்காட்சி, நன்ஞானம, நல்லொழுக்கம் ஆகிய மூன்றுமே துணையாகும் என மொழிந்தார் இதனை

'' மெய்வகை தெரிதல் ஞானம்
விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல்
காட்சியைம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா
தொழுகுத லொழுக்க மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினை கழியு மென்றான்''

என, சீவக சிந்தாமணி ஆசிரியர், திருத்தக்க தேவரும்.

"பேர்தற்கு அரும்பிணி தாம் இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்து இவை

---

*Who and What rules the universe ? So for as we can see it, It rules itself and indeed the whole analogy, with a country and its rule is falss. (Julian Huxley)

இவை உண்டார்
பேர்த்து அப்பிணியுள் பிறவார் பெரிது இன்பமுற்றே'
என நீலகேசி ஆசிரியரும் பகர்கின்றனர்

"தன்னிற் பிறிதில்லை தெய்வம் நெறிநிற்பில்
ஒன்றுனுந் தானெறி நில்லானேல்—தன்னை
இறைவனுச் செய்வானுந் தானேதான் தன்னைச்
சிறுவனுச் செய்வானுந் தான்"

என அறநெறிச்சார ஆசிரியர் முனைப்பாடியாரும் நன்கு விளக்கியுள்ளார்.

எனவே, நமது வாழ்வின் முன்னேற்றத்திற்கும் வீடு பேற்றிற்கும் எவரும் காரணமல்ல.

" யாதும் ஊரே ; யவாரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;"

என்னும் புறநானூற்றுப் பாடலிலும் இக்கருத்து விளங்குவதைக் காணலாம்.

அவரவர்களின் அறிவு, திறமை, ஊக்கம், விடாமுயற்சி சூழ்நிலை ஒழுக்கம், தவம் முதலியவைகளைப் பொறுத்தே பலாபலன்களை அடைகிறோம்.

இளங்கோவடிகள் தமது சிலப்பதிகார காவியத்தில் பல சமயங்களின் கடவுள்களைப் பற்றியும், அவர்கள் செயல் குணம் முதலியவைகளைப் பற்றியும் அந்தந்தச் சமயக் கொள்கைப்படி கூறிவிட்டுக் கடைசியாகத் தமது அறவுரையில் 'தெய்வந் தெளிமின்' என்று கூறியுள்ளார். தெய்வம் தொழுமின் எனுது தெய்வந் தெளிமின் என்பதன் கருத்தை ஆய்வது போன்று அக்பர்ஷாவின் கொலு மண்டபத்தில் கடவுளைப்பற்றி ஒரு ருசிகரமான விவாதம் நடைபெறறது அவ்வரலாற்றுச் செய்தியை நாமும் படித்துத் தெய்வந் தெளிவோம்.

அக்பர் சாம்ராஜ்யத்தில் அக்பருடைய பக்திக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர் ஸ்ரீ ஹிர்விஜய சூரி எனற

ஜைன முனிவர். அவர் பல்கலைப் புலவர். அவரும், அவருடைய சீடர்களான பானுசந்த்ஜீ முனிவரும், விஜயசேனசூரிஜீ முனிவரும் அக்பரின் அரசாட்சியை அறவழியில் செலுத்தி அலங்கரித்து வந்தனர். அதனாற்றான் மொகலாய மன்னர்களில் அக்பருடைய ஆட்சியே சிறப்புற்று அழியாப் புகழுடன் இந்திய வரலாற்றில் விளங்குகிறது. அத்தகு புகழும் புலமையும் வாய்ந்த ஜைன முனிவர்கள், அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்ததைப் பொறாத சிலர், அக்பரிடம் சென்று ஜைனர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் என்று புகார் செய்தனர். அதன் பின்னர் அக்பர் ஸ்ரீ விஜயசேன சூரி சுவாமியை அழைத்து, கடவுள் உண்டா இல்லையா? என்பதைப்பற்றி மற்றவர்களோடு விவாதிக்குமாறு வேண்டிக்கொண்டார். முனிவர் சம்மதிக்கவே, விவாதத்திற்கும் ஏற்பாடாயிற்று. அக்பர்ஷா கொலுமண்டபத்தில் விஜயசேனசூரி முனிவருக்கும் வைதிக சமய அறிஞர்களான பிராமணர்கட்கும் விவாதம் நடந்தது.

விஜயசேனசூரிஜீ சாஸ்திர ஆதாரங்களுடன் தர்க்க ரீதிக்கும், அறிவுக்கும் பொருத்தமான முறையில் கடவுளைப் பற்றி ஜைனர்கள் கொண்ட கருத்தைத் தெளிவாக எடுத்து விளக்கினார். இதனால் சக்கரவர்த்தியும் திருப்தி அடைந்தார். பிராமணர்களும் அக்கொள்கையை ஏற்றுக் கொண்டதுடன், மேற்கொண்டுபேசவும் வழியின்றி மௌனமாக நின்று விட்டனர். இவ்வரலாற்றுச் செய்தியை மோஹன்லால் தாலிசந்த் தேசாய் B.A., LL.B. அவர்கள் தாம் எழுதியுள்ள 'பானுசந்த் சரித்திரம்' என்ற ஆங்கில நூலில் பின் வருமாறு குறித்துள்ளார்.

"Some Non Jainas told Akbar that the Jainas did not believe in God. Upon this, the Emperor requested Vijay-Senasuri to hold a debate at his Court with the learned brahmins, on the subject of the existence or otherwise of God. The debate was duly conducted and Vijayasena, quoting chapter and verse from the

scriptures, marshalling facts and arguments basd upon sound logic, gave a lucid exposition of the Jaina view of God, and convinced and silenced the Brahmins once for all"

எனவே, ஆதிபகவானின் அறவுரைகள் பக்தி மார்க்கம் எனும் படுகுழியில் தள்ளாமல் பகுத்தறிவுப் பாதையிலே செலுத்தி மக்கள் பண்பை வளர்த்தன அது மட்டுமல்ல ! மக்கள் வாழ்க்கையிலே நின்று உலகை மாண்புடன் வளம் பெறச் செய்தன. எனவே மக்கள் அவர்தம் அறிவியக்கத்தை ஆர்வத்தோடு ஏற்றனர் அறிவியக்கம் இன்றுவரை உலகிடை நன்கு வளர்ந்து வருகிறது

இத்தகைய பகுத்தறிவுக் கொள்கையைத் திராவிடர் பண்பு எனக் கூறுதல் மிகையாகாது வரலாற்றுப் பேராசிரியர்களின் ஆராய்ச்சிப்படி திராவிட நாகரீகம் இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் பரவியிருந்த தென்பதை அறிகின்றோம். மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய விடங்களில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற புதை பொருள்களில் நிர்வாணமாக ஒரு யோகி நிற்கும் நிலையாகப் பல உருவங்கள் காணப்படுகின்றன.

அவை விருஷபதேவருடைய சிலையாகவோ, வேறு ஜைன தீர்த்தங்கரருடைய சிலையாகவோ இருக்க வேண்டுமெனப் பல அறிஞர்கள் முடிவு செய்திருக்கின்றனர் மேலும் அங்குக் கிடைத்துள்ள *முத்திரைகளில் 'ஜிநேஸ்வரா' அல்லது ஜிநேசா' என்ற பதங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஸ்வஸ்திகக் குறிகளும் ஜைன மந்திரங்களும் பொறிக்கப்பட்ட பல முத்திரைகள் காணப்படுகின்றன.

---

*இம் முத்திரைகளின் விவரங்கள் கீழ்க்கண்ட ஆங்கிலப் புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

'The Script, on the Indus Valley Seals' by Dr. Pran Nath D. Sc. (Lond) Ph. D. (Vienna), in The Indian Historical Quarterly, Vol. VIII

எனவே, இவை நமது ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்கின்றன. மேலும், இதனை உறுதிப்படுத்த பகவத்கீதை சான்று பகர்கின்றது. அர்ச்சுனன் அஹிம்சா தருமத்தில் முழு நம்பிக்கை கொண்டவனாகிப் போர் தொடுக்க மறுக்கிறான்; கொலை செய்யக் கூசுகிறான் உறவினர்களின் மீதும் குருமார்கள் மீதும் அம்பைத் தொடுக்க மனம் எழவில்லை இதனைக் கண்ட கிருஷ்ணன், *"அர்ச்சுனா! அச்சத்தோடு கூடிய இந்த இழிநிலையில் உன்னை மயக்குவது அஹிம்சா தருமமேயாகும். அது நமது கொள்கையன்று; அநாரியர் கொள்கை;" எனக் கூறுகின்றார் இக்கூற்றுப்படி அஹிம்சா தருமமும், அதன் கர்த்தாவாகிய விருஷபதேவரும் அநாரியர் (ஆரியரல்லாதவர் எனப் பெறப்படுகின்றது அநாரியர் என்றபோதே, திராவிடர் என்பது சொல்லாமல் விளங்கும்.

*பகவத் கீதையின் கொள்கையை வலியுறுத்தும் வகையில் 26 11 50ல் தென்னிந்திய இந்துமகா சபையில் பேசிய ஸ்ரீசட்டர்ஜீ அவர்கள் 'இந்துமதத்திற் கொவ்வாத அஹிம்சா கொள்கையை இளைஞர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதால் நாட்டிற்குக் கதி மோட்சம் ஏற்படாது' எனக் கூறியுள்ளார்.

இவை யனைத்தையும் மெய்ப்பிக்க விருஷப தேவருடைய பட்டத்தரசிகள் நமக்குப் பெருஞ்சான்றாக விளங்குகின்றனர். விருஷபதேவருடைய இரு பட்டத்தரசிகளும் விஞ்சையர் மாதர்கள். விஞ்சையர் (வித்தியாதரர்) எனபவர்கள் அனைவரும், திராவிட மக்களே யாவர். இவ்வுண்மையை இராவணன், வாலி முதலியவர்களின் வரலாற்றாலும், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய சமண நூல்களாலும் அறியலாம். விருஷப தேவருடைய முதல் பட்டத்தரசியாரின் வயிற்றிற் பிறந்த முதற் புதல்வன், பரதன்

---

*பகவத் கீதை: இரண்டாம் அத்தியாயம், இரண்டாம் ஸ்லோகம்

*சுதேசமித்திரன், 26-11-50

ஆவான். அப்பரதனே இந்நாடு முழுமையும் அறவழியில் ஆண்ட முதற் சக்கரவர்த்தி, அதனுல இந்நாட்டிற்கு அவர் தம் பெயராலேயே பரத கண்டம் என வழங்கலாயிற்று.

மொழியிலும் ஒற்றுமை காணலாம், எழுத்து எண் இரண்டையும், விருஷபதேவரே முதல் முதல் தோற்றுவித்தார் என முன்னரே கூறியுள்ளோம். அவ்விரண்டையும் முறையே பிராமி, சுந்தரி என்ற தம் இரு குமாரத்திகளின் மூலமாகவே அவர் ஆரம்பித்து வைத்தார். அதனுற்றுன் அவ்வெழுத்துக்களுக்கு பிராமி எழுத்தென வழங்கலாயிற்று. அப்பிராமி எழுத்துக்களுக்கும், தமிழ் எழுத்துக்களுக்கும வரிவடிவில் நெருங்கிய ஒற்றுமை உண்டென்றும, பெயர் அளவில்தான் வேற்றுமையென்பதும் பல ஆராய்ச்சி அறிஞர்கள் கண்ட முடிவு. மேலும் அசோகன் காலத்தில் தென்ஞடும் வடநாடும் கொண்ட இந்நாடெங்கும் பிராமி என்ற ஒரு மொழி பரவியிருந்ததெனக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் ஆதாரத்துடன் அறிவித்துள்ளனர். அன்றியும் தமிழ் மொழிக்கே சிறப்புடையதாகிய 'ற' வும் 'ழ' வும் பிராமி எழுத்தில் இன்றளவும் காணப்படுகின்றன எனவே, **விருஷப தேவரின் மொழி இயலிலும் திராவிடக் கதிரொளியே வீசுகிறது**

இவ்வுண்மைகளை மேல்நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் பல சான்றுகளுடன் மெய்ப்பித்துள்ளனர். ஆகவே ஆதிகால வரலாற்றுப்படி, அயோத்திமா நகரில் பிறந்த விருஷபதேவர் (ஆதி பகவான்) திராவிடரே என்பதும் அவரே மெய்யுணர்வு அல்லது பகுத்தறிவு இயக்கத்தின் முதல்வர் என்பதும் உறுதிப்படுகின்றன.

கி மு. 454 - ம் ஆண்டில கலிங்க நாட்டிலிருந்த **விருஷபர்** சிலையை மகத நாட்டரசன் நந்தவர்த்தனன் என்பவன் கவர்ந்து சென்று பாடலிபுரத்தில் வைத்ததும பின்னர் கலிங்க நாட்டுப பேரரசன் காரவேலன் மகதநாட்டின்மீது படையெடுத்து வெற்றி கண்டு அச்சிலையை மீட்டுக்

கொண்டு வந்து தனது நாட்டில் பிரதிஷ்டா மஹோற்சவம் செய்தானென்பதும் அவ்விழாவிற்குத் தமிழ்நாட்டுப் பேரரசன் பாண்டிய மன்னன் தன் பரிவாரங்களுடன் சென்று சிறப்பியற்றினன் என்பதும் கி, மு, 170 - ல் உதயகிரி மலையில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுச் செய்தியால் அறிகின்றோம் இதனால் விருஷபதேவர் திராவிட மக்களால் நன்கு போற்றப்பட்டவர் என்பதும் புலனாகின்றது மேலும் இதற்கு வச்சிரநந்தி முனிவரால் மதுரையில் தோற்றுவிக்கப்பட்ட திராவிட சங்கமே சான்றாகும்

ஆரியருக்கு முன் திராவிட நாகரிகம்

நமது தேசீய இந்திய சர்க்காரில் நிதி மந்திரியாக விளங்கிய திரு ஸர், ஆர் கே, சண்முகம் செட்டியாரவர்கள் 1943 ம ஆண்டில் சென்னையில் நடந்த மகா வீர ஜயந்தி விழாவன்று தலைமை வகித்துப் பேசுகையில் "ஆரியர் வருவதற்கு முன்னர், நமது நாட்டில் திராவிட நாகரிகமே எங்கும் பரவியிருந்ததென்றும். அது சமண சமயக்கொள்கையாகவே இருந்திருக்க வேண்டுமென்றும், அதை நான் பூரணமாக நம்புகிறேன்" என்றும் கூறிய ஆராய்ச்சி உரை, நமது கொள்கைக்கு மிகமிக அரண் செய்கிறது. அறிவியக்கத்தின் தந்தையாக விருஷபதேவர் விளங்கியமையால் அவரை அறிவர் என்றே போற்றினர். வடநூலார் கேவல ஞானி எனக்கூறுவர். திருக்குறளாசிரியர் வாலறிவன் எனப் புகழ்ந்துள்ளார். விருஷபதேவர் வினைகளை வென்று வீடுபேறு பெற்றமையால், அவரைத் தொல்காப்பியர் "வினையின் நீங்கி விளங்கிய அறிவன்" எனப் போற்றியுள்ளார். எனவே, அறிவர் இயக்கம் அகில இந்தியாவிலும் பரவிற்று. எங்கும் அறவோர் பள்ளிகள் எழுந்தன தமிழகத்திலும் அவ்வாறே பள்ளிகளும, அறிவர் கோயில்களும் அமைக்கப் பட்டன.

நமது தொண்டைமண்டலப் பகுதிக்கு அறிவர் நாடு என்றே பெயர் வழங்கலாயிற்று. அறிஞர். பண்டாரகர்

குண்டேர்ட் என்பவர் அறவம் என்பது, அரவம் என ரகர றகர மயக்கத்தால் அழைக்கப் பட்டிருக்கலாம் என்று தம் ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளது நம் கருத்துக்கு அரண் செய்கிறது

புதுக்கோட்டை சித்தன்ன வாசலுக்கடுத்த ஒரு கோயிலின் கல் வெட்டில் அறிவர் கோயில் எனப் பொறிக்கப்பட்டுள்ளது அங்கே அறிவர் சிலபும் அழகாகக் காட்சியளிக்கின்றது. தமிழகம் இந்த அறிவியக்கத்திற்குத் தாயகமாய் விளங்கிற்று. ஆகவே, இங்குப் பல பேரறிஞர்கள் தோன்றினர். அரும் பெருங் காவியங்களையும், நீதி நூல்களையும் இயலறினர் இயல், இசை, நாடகம ஆகிய முத்தமிழையும் பற் கலைகளையும் வளர்த்துத் தமிழ்த் தாயை அலங்கரித்தனர், மக்கள் அனைவரும், பெருமகன் திருமொழி பிறழா நோன்பினராயினர். தேவ மூடம், பாஷண்டி மூடம், லோக மூடம் ஆகிய மும்மூடங்களையும் அகற்றி, அறிவாலும் ஒழுக்கத்தாலும் சிறந்தனர்.

"விரையார் மலர்மிசை வருவார்; திருவறம்
விழைவார் கொலைபுரி விழையார், பொய்
யுரையார், களவினை யொழுகார், பிறர்மனை
யுவவார், மிகுபொரு ளுவவார், வெஞ்
சுரையா லுணர்வினை யழியார், அழி தசை
துவ்வார், விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரார், இரவுணல்
புகழார், குரவரை யிகழாரே." —திருக்கலம்பகம்

என்ற இறைவன் திருமொழியின மெய்ப்பொருளின்படி கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை, கள்குடியாமை, ஊன் உண்ணாமை முதலிய நல்லொழுக்கங்களுடன் மிகுபொருள் உவவாமையை மேற்கொண்டு மக்கள் பகுத்துண்டு

வாழ்ந்தமையால் நாட்டில் பொருளாதார நிலை பொதுவுடைமையாக விளங்கிற்று எனவே பொதுவுடைமைத் தத்துவம் என்றைக்கோ விதை கோலப்பட்டது.

தமிழ்ப் பெரியார் திரு வி க. அவர்கள், தாம் எழுதிய 'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி' என்ற நூலில் 125 ம் பக்கத்தில் பின்வருமாறு விருஷபதேவரின் கொள்கையை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

சமண சமயமும் சமதர்மமும்

"பொருந்திய உணவுக்கு முதல் முதல் கால் கொண்ட நாடு நமது பாரத நாடு அவ்வுணவால் விளையும் நலன்கள் பல. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கன இரண்டு. ஒன்று கொல்லாமை மற்றொன்று தேவைக்குமேல் பொருள் திரட்டாமை இவை அஹிம்ஸையின் பாற்பட்டன.

"பாரத நாட்டில் கொல்லாமை விதை விழுந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. அவ் விதையை முதல் முதல் விதைத்தவர் விருஷபதேவர். அவர் கொல்லாமையை அறிவுறுத்தியதோடு நின்றாரில்லை. தேவைக்குமேல் மனிதன் பொருள் சேர்த்து வைத்தல் கூடாதென்றும் அருளினர். தேவைக்குமேல் பொருள் சேர்த்து வைப்பது பிறரை ஹிம்ஸிப்பது என்று கருதினர். கொல்லாமையும் தேவைக்குமேல் பொருள் சேர்த்து வையாமையும் வேற்றுமை யற்ற ஒன்று என்று விருஷபதேவர் திருவுள்ளம் எண்ணியது அவ்வெண்ணம் மெய்யுணர்வால் முகிழ்த்தது. மெய்யுணர்வு தேவரை 'அஹிம்ஸா பரமோ தர்ம' என்று போதிக்கச் செய்தது தேவர் அறிவுறுத்திய தர்மம் சமதர்மம். வாழ்க்கையை — சமூகத்தை – உலகத்தைப் போரின்றிக் காத்து நல்வழிப்படுத்துந் திறனுடையது. அத்தர்மம் மார்க்ஸியமும் காந்தியமும் கலந்த ஒன்று என்று இந்நாளில் யான் பேசியும் எழுதியும் வருகிறேன். காந்தியம் என்பது நாட்டில் புதியதாகத் தோன்றியதன்று. அது விருஷபதேவர் வழி வழியே வாழையடி வாழையென வளர்ந்து வருவது. விருஷப

தேவர் தர்மம், போரை அறவே தொலைத்து அமைதியை ஓம்ப வல்லது."
என்றும், 148 ம் பக்கத்தில் திருக்குறளைப் பற்றி அந்தப் பெரியார் எழுதும்போது, "திருக்குறள் ஆராய்ச்சிக்குப் பல திறக் கலைகளின் துணைதேவை ஒன்று ஜைனக் கலைத் துணை, மற்றொன்று மார்க்ஸியக் கலைத்துணை. இரண்டும் பொருந்திய புரட்சி நிகழ்த்தின் காலத்துக்குரிய வழியில் திருக் குறளை மலைவிளக்காக்கும். தேவைக்குமேல் பொருளீட்டா அறத்திலும், வேறு சில தத்துவங்களிலும் ஜைனத்துக்கும் மார்க்ஸியத்துக்கு தொடர்பு உண்டு" என்றும் நன்கு எடுத்து விளக்கியுள்ளார்கள்.

அது மட்டுமல்ல; 'அருகன் அருகே அல்லது விடுதலை வழி' என்ற நூலில்,

'பொருளொரு பாலே பெருகி மறுபால்

....

அருகின் குழப்பம் ஆர்க்கும் என்பதை
என்றோ என்றோ என்றோ உணர்ந்து
மிகுபொருள் வேட்டலை விடுக என்றவன்'

என விருஷபதேவரைப் போற்றியுள்ளார்

பொதுவுடைமைத் தத்துவம் ஒரு விரதம்

இவ்வாறு பொதுவுடைமைத் தத்துவத்தை ஐமபெரும் விரதங்களில் ஒன்றாக அமைத்து அறம் வகுத்தவர்கள் வேறெந்தச் சமயங்களிலும் இல்லை விருஷபதேவர் நிலையா மையை வற்புறுத்தியதும் இக் காரணத்திற்காகவே தான். இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலை யாமை ஆகிய மூன்றும் மக்களின ஆசையை அளவுபடுத்து வதற்காகவே யன்றித் துறவறத்துக்கு மாத்திரம் அன்று' மக்களுக்கு ஆசை இயற்கையாகவே அமைந்திருப்பினும்,

அது அதிகரித்துப் பேராசையாகப் பரிணமிக்கும்போது அவர்கள் தங்கள் நிலையினின்றும் தவறிவிடுகின்றனர். தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள எத்தகைய தீய செயல்களிலும் ஈடுபட்டு விடுகின்றனர். மதக்கொள்கைகளை மதிப்பதில்லை. சுற்றம், நட்பு இரண்டும் அவர்கள் அகராதியில் காண முடியா. நடுநிலைமையெனும் அறக் கோட்டையைத் தகர்த்து விடுவர் பிறருடைய இன்னல்களைச் சிறிதும் பொருட்படுத்த மாட்டார்கள். பொதுநலம் அவர்கள் கண்களில் புலப்படாது சுயநலமே உருவாகிக் கல்நெஞ்சராகி விடுவர் சிலர் தங்கள் நலத்தில் கூட அக்கறை கொள்ளமாட்டார்கள் இவர்களும் மக்கள் சமுதாயத்தில் வாழ்பவர்கள்தாம் இவர்களை எவ்வாறு திருத்துவது?

பொதுவுடைமைக்கு வித்து யாது?

இத்தகைய மனப்பான்மையுடைய மக்களின் மனத்தை மாற்றவே நிலையாமைத் தத்துவம் துணைபுரிகின்றது. செல்வமும் இளமையும் யாக்கையும் என்றும் நிலையா வென்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தவுடன் ஆசை வயப்பட்டு அநீதியில் செல்பவர்கள் அதிர்ச்சியுறுவார்கள். தங்கள் இழிசெயலை எண்ணி வெட்கமுறுவர். இரக்கம் இடம்பெறும் இந்த வாழ்வு சதமா! எத்தனை நாளைக்கு நிலைக்கும். இறக்கும்போது இவைகளில் ஒன்றும் தொடர்ந்து வரப் போவதில்லையே! இதற்காகவா பிறரை வஞ்சிப்பது! நம்மால் பாதிக்கப்பட்டவர்களின் மனம் என்ன பாடுபடும்! இவ்வளவு மக்களையும் ஏமாற்றி நாம் அடையப்போகும் பயன்தான் என்ன? பாவம்! அவர்களும் நம்மைப் போன்று வாழ வேண்டாமா! சீச்சீ! என்னே அறியாமை! பாழான பேராசையன்றோ பிறர் துன்பங்களை மறைத்து விட்டது! உலகிற்கு ஒரு நன்மையும் செய்ய வொட்டாமல் தடுத்து விட்டது என்றெல்லாம் எண்ணிப் புழுங்குவர். அறிவின் வழி நிற்பர்! அறநெறிபுகுவர்; சுயநலப்பேயை விரட்டுவர்! நடுநிலைமையை நாடுவர்! பொதுநல சேவைகளில் ஈடுபடுவர். அவைகட்குப் பொருளுதவியும் தாராளமாகச் செய்வர்.

இத்தகைய காட்சிகளை மனித வாழ்க்கையில் ஆண்டி முதல் அரசன்வரை காணலாம்! எனவே விருஷபதேவர் அஹிம்ஸை வழியில சமதர்மத்தை நிலைநாட்டவே, இந்நிலையாமைத் தத்துவத்தை வித்தாக அமைத்தார் இந் நிலையாமைத் தத்துவத்தைத் தமது வாழ்க்கையில் நடத்திக் காண்பித்தார் ஆசைக்கோர் அளவுவைத்து வாழ்க்கையை நடத்தினர் மன்னுயிர்களின் நலனே தம்முடைய நலனெனக் கொண்டு அரசுரிமையைக் கடமையாக ஏற்றுக் காவல் புரிந்-தார். மண்ணினுக் கிருளைப் போக்கும் கண்ணென விளங்கி னர் பின்னர் ஆத்மீகத் துறையில் இறங்க எல்லாவற்றை யும் துறந்து தவமியற்றி வீடுபேறு பெற்றார்.

எனவே, நிலையாமைக் கொள்கை இரண்டறங்களுக் கும் துணை செய்கின்றது. அவர்தம் இல்லற இயல்பினை யும், துறவற நெறியையும் பாராட்டிப் போற்றியுள்ள துதி நம்மைப் பாவசப் படுத்துகின்றது.

"மன்னுயிர் காத்தலான் மனம்விட்ட வருளினோடு
இன்னுயி ருய்கென வில்லறமு மியற்றினையே
புன்மைசா லறநீக்கிப் புலவர்கள் தொழுதேத்தத்
தொன்மைசால் குணத்தினாற் றுறவரசாய்த்
தோற்றினையே"

—யாப். விருத்-சூத். 84, உரைமேற்கோள்

பிறப்பினுல் அனைவரும் ஒன்றே

எனவே, விருஷபதேவர் அமைத்த சமுதாயத் துறையில் பசி பிணி, பகையின்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மையோடு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த னர். தேவைக்குமேல் பொருளைத் திரட்டாமை என்னும் பொதுவுடைமைத் தத்துவம் பொலிவுற்றிருந்தது. செய்தொழில் வேற்றுமையன்றிப் பிறப்பினுல் அனைவரும் ஒன்றென விளங்கினர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" -குறள்.

வாணிபம் கைத்தொழில் முதலியன வளர்ந்தோங்கின வாணிபத் துறையில் அயல்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இவைகளைச் சரித்திரம் சாற்றும்.

தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்களே! வரலாற்றுப், பேராசிரியர்களே! அறிஞர்களே! விருஷபதேவர் கொள்கை ஒரு சமூகத்திற்கோ, ஒரு நாட்டவருக்கோ உரியதன்று உலகிற்கே உரியது உலகிலும் மக்களுக்கு மட்டுமல்லாமல் மன்னுயிர் அனைத்திற்கும் பொதுவானது.

தமிழ்நாட்டுப் பண்டைய சமணப் பேரறிஞர்கள் அவ் அறிவன் அருளிய அறிவியக்கக் கொள்கையைத் தழுவி, அரும் பெரும் நூல்களை யாத்துள்ளனர் அவைகளே தொல்காப்பியம் திருக்குறள், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, சூளாமணி, பெருங்கதை, நீலகேசி, நாலடியார், யசோதரகாவியம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், பழமொழிநானூறு, ஜீவசம்போதனை, அறநெறிச்சாரம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி போன்ற பல நூல்களாம்.

இவைகள் யாவும் சமய நூல்களே அல்ல. உலக மக்களுக்கெனவே சமண அறிஞர் பெருமக்களால் இயற்றி அருளியவை இவ்வுண்மையைப் பரணிக்கோர் சயங்கொண்டான் என விதந்தோதப்பெற்ற சமண அறிஞராகிய கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டாரை, அபயன் 'நுமதூர் யாது?' என்று கேட்டபோது, அவர் சோழவள நாட்டிலே, நன்னிலத்திற்கு அண்மையிலுள்ள 'தீபங்குடி' தமதூர் என்று பெருமையாகக் குறிப்பிடும் பொழுது அவர் சொன்ன கீழ்வரும் அழகான கவிகளில் காணலாம்,

நீரும் கயமு மிகுசோ லைகளும்
நிரைசேர் பழனக் கரையின் கமுகுங்
காரும் பரவும் வளநா டிதெனக்
களிகூர் தமிழ்நா வலர்வாழ் புரியூர்.

காலைப் பொழுதும் மாலைப் பொழுதும்
கல்விப் பொருளே செல்வப் பொருளாய்
மேலைக் குறுநற் குணனைக் கருதி
மிகுமா தவமே புரிவார் தமதூர்.

செய்யும் வினையும் இருளுண் பதுவும்
தேனும் நறவும் ஊனும் கொள்ளலும்
பொய்யுங் கொலையும் களவுந் தவிரப்
பொய்தீர் அறநூல் செய்வார் தமதூர்.

வஞ்சங் கருதார் பிறனில் விழையார்
வாமன் வழிநூல் வழுவார் நிதமும்
இன்சொன் மிகுமா தவர்தாள் தொழுதே
இயல்நல் லறமே புரிவார் தமதூர்.

நிலைசேர் பொருளும் நிலையில் பொருளும்
நிமலன் நெறியால் உலகுக் குரைசெய்
தலையா கியமா தவர்தாள் நிதமும்
தலைகொண் டிதமே புரிவார் தமதூர்.

அனகன் அமலன் அரியே றணையான்
ஆதிப் பெருமா னலர்மேல் வருவோன்
பனகப் பணிநீ ழலில்வா ழருகன்
பததா மரையே பணிவார் தமதூர்.

வண்டார் பிண்டிக் கிறைமுக் குடையான்
வாமன் தருமத் திகிரிப் படையான்
தொண்டா கியமா தவருக் குரியன்
துகளார் மனமுற் றவருக் கரியன்

பண்டார் வேதப் பரமன் சரணைப்
பரிவால் நிதமும் பணிவார் தமதூர்
குண்டார் முலைரிமன் மடவா ரதரங்
கோபங் கடியுந் தீபங் குடியே!

உலக சமாதானமும் சமண தர்மமும்

இவ்வளவு சிறப்புற்று விளங்கும் அறிவியக்கக் கொள்கை யாகிய திருவறங்களைத் தற்கால அறிஞர் பெருமக்களும் வரவேற்கின்றனர். கல்கத்தாவிலே உலக சமாதானக் கோஷ்டியார் விஜயம் செய்தபோது அவர்களுக்கு வரவேற்பு நடத்திய சமயத்தில் ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளை விசாரணை செய்த சர்வதேச டிரிபுனல் முன்னை நீதிபதி டாக்டர் ராதாவினோத், பால் அவர்கள் கூறிய பல்வேறு விஷயங்களின் இடையில் *எந்தச் சமாதானப் பிரியர்களின் மகாநாட்டுக்கும் பிரதிநிதிகளை அழைத்து நல்வரவு கூறும் உரிமை எவருக்கேனும் உண்டெனில், அது சமண சமூகத்தினருக்கே; உலக சாந்தியை

---

* "The Jaina Gazette" January, 1950.

அடைய வல்ல அஹிம்ஸைக் கொள்கையானது சமண தீர்த்தங்கரர்களால் மனித முன்னேற்றக் குறிக்கோளுக்காக அளிக்கப் பெற்ற உண்மையான மிகச் சிறந்த 'தானம்' ஆகும். உலக சாந்தியைப் பற்றிப் பேசும் உரிமை பார்ஸ்வ நாதர், மகாவீரர் ஆன மகான்களைப் பின்பற்றும் நெறி யாளரைத் தவிர வேறு யாருக்கு உண்டு?" என்று குறிப்பிட் டுள்ளார்.

இவ்வாறே பல அறிஞர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர் எனவே, உலக மக்களின் உரிமையுடையதாகிய ஜைனத் திருவறங்களை மக்களின் நன்மையைக் கருதிப் பரப்புங்கள்! உலகில் சமாதானம் நிலவும்! சகோதர உணர்ச்சி வளரும் ஒழுக்கம் உச்ச நிலை அடையும்!

வாழிய நல்லறம்!

பாலர் இல்லம் பிரிண்டிங் திருநகர்-.



"ஜீவபந்து" ஸ்ரீ T. S. ஸ்ரீபால்

'தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனு யின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துயர்ந்து போகுமே'

— சீவக சிந்தாமணி

வெளியீடு : தமிழ்ச் சமணர்கள் சங்கம், மதுரை.

Wrapper Printed By PRAKASH PRINTERS, MADURAI-1.